No. of. Printed Pages:10

பதிவு எண்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# மொழிப்பாடம் தமிழ்

கால அளவு : 3:00 மணிநேரம் மதிப்பெண்கள் :90

அறிவுரைகள் :

i) அனைத்து விண்ணகளுக்கும் சரியாகப் பதிவாக உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்கண்ணிப்பாளரிடம் உடன்நடியாகத் தெரிவிக்கவும்.

ii) நீளம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிகொடுத்திடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு:

விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாவும் அந்த நடையிலும் அமைத்தல் வேண்டும்.

## பகுதி -I

குறிப்பு :

i) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **14 × 1 = 14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினனைத் தேர்ந்துஎடுத்து குறியீட்டுடன் விடையினனையும் எழுதவும்.

1. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் இ) ரூபாய்,லட்சாதிபதி

ஆ) டமாரம்,இங்ஙனம் ஈ)றெக்கை, அங்ஙனம்

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

2. பாயிரம் இல்லது________ அன்றே.

அ)காவிம் இ) பாடல்

ஆ)பனுவல் ஈ) கவிதை

3. வான்பொய்த்தது - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்.

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

4. மண்ணுக்கு வளம் சேர்ப்பன-

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

5. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்

இ)முருகன் ஈ) பாரதியார்

6. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, இடைநிலை,சந்தி, னிசாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி,சந்தி, விகாரம்

ஈ) பகுதி,விகுதி

7. WHO- என்பதன் தமிழ் விரிவாக்கம்

அ) உலக வர்த்தக மையம் ஆ) உலக நல நிறுவனம்

இ) உலக வணிக அமைப்பு ஈ) உலகப் பொருளாதார மன்றம்

8. சிவப்பு வண்ணத்தாளில் பாரதியார் வெளியிட்ட இதழ்.

அ) விஜயா இ) சக்ரவர்த்தினி

ஆ) இந்தியா ஈ) சுதேசமித்திரன்

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

9. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

10. ஏடு,சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள்

அ) நூல் இ) எழுத்தாணி

ஆ) ஓலை ஈ) தாள்

11. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்.

அ) 21 ஆ) 24 இ) 22 ஈ) 23

12. சரியான இனமிகல் தேர்வு செய்க.

அ) செங்கதிர் இ) பைங்கூழ்

ஆ) பெருங்கொடை ஈ) காரிருள்

13. நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள குறுந்தொகை பாடலில் ஆசிரியர் யார்?

அ) அழகிய பெரியவன் இ) அண்ணாமலையார்

ஆ) வெள்ளிவீதியார் ஈ) கவிராயர்

14. திருக்குறளை போற்றிப் பாடும் நூல்.

அ) நன்னூல் இ) கலித்தொகை

ஆ) தொல்காப்பியம் ஈ) திருவள்ளுவமாலை

## பகுதி -II

### பிரிவு-1

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்க: $3 \times 2 = 6$

15. பாயிரம் பற்றி நீ அறியும் கருத்து யாது?

16. தமிழர்கள் புகழ்,பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்பதாக புறநானூறு கூறுகிறது?

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

17. நல்ல குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

18. இனம், மொழி, குறித்து இரசூல் கம்சதோவ் கருத்து யாது?

## பிரிவு -2

எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க: $2 \times 2 = 4$

19. மனிதனுக்கு உண்டான தனிப்பட்ட திறமையாக நோம் சோம்ஸ்கி எதனைக் கூறுகிறார்?

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்து குறிப்பு வரைக.

21. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

## பிரிவு -3

எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்க: $7 \times 2 = 14$

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:-

அ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

ஆ) தேர்வெழுத வேகமாகப் போங்க நேரங்கழிச்சி போனப் பதட்டமாயிரும்.

23. அறிந்து - பகுபத உறுப்பிலக்கணம தருக.

24. என்றிவை- பிரித்து புணர்ச்சி விதி எழுதுக.

25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:-

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

திண்,தின்

தணி,தனி

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க: "தங்கை".

28. விடைக்கேற்ற வினாவை அமைக்க.

சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர்.

29. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

அ) யுகம் ஆ) முக்கியத்துவம்

30. வேர்ச்சொல்லை வினைமுற்று தொடராக மாற்றி அமைக்க.

"ஓடு"

**பகுதி -III**

**பிரிவு-1**

எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் தருக: $2 \times 4 = 8$

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றை குறிப்பிடுகிறது?

32. "சலசலவாவியில் செங்கயல் பாயும்"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. விரும்பியதை அடைவது எப்படி?

34. குறள்வழி விளக்குக.

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் கூறும் ஒப்பிடு யாது?ஏன்?

பிரிவு-2

எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்க: $2 \times 4 = 8$

35. " என்னுயிர் தமிழ்மொழி என்பேன் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

36. " மலைமனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது "- சான்றுடன் விளக்குக.

37. கூற்று -குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

38. கவிதை -கூண்டு திறந்து சிறகடிக்கவா? இல்லை? சீட்டெடுக்க.

-கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது.

பிரிவு-3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. $3 \times 4 = 12$

39. வேற்றுமைஅணி (அல்லது) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. தமிழாக்கம் தருக.

a) The pen is mightier than the sword.

b) Knowledge rules the world.

c) A picture is worth a thousand words

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

d) Work while you work and play while you play.

41. பொதுவியல் திணையை சான்றுடன் விளக்குக.

42. இலக்கியநயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக:

ஆயிரம் வண்ணம் காட்டும்
அடிவான முகில்கள் ஓடிப்
பாய்கதிர் ஒளிம றைக்கும்,
பலமலை குன்றைச் சுற்றிப்
போய்விழும் ஓடை போலத்
தோன்றிடும்; புதுவெள் ளத்தில்
மாய்கதிர் செக்கர் வானம்
எழிலோவி யம்பார் தம்பி!
களிமயில் அகவும்;புள்ளிக்
கருங்குயில் பாட்டி சைக்கும்;
விளித்திடும் துணைபி ரிந்த
ஓளித்துண்ணும் மிளகா யென்று
களிதுண்ணப் பாயும் ; காட்டில்
காண்எழில் ஓவி யத்தை!

- வாணிதாசன்

43. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்பு எழுதுக.

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

( அல்லது )

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

## பகுதி -IV

அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:

$3 \times 6 = 18$

44. அ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் -இக்கூற்றை குறள்வழி விளக்குக.

(அல்லது)

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை தென்கரை நாட்டு பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்த இருந்தன -கூற்றினை நிருவுக.

(அல்லது )

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை,உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

( அல்லது)

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

[ திருப்புக

DREAM REALITY TUITION & TUTORIAL

www.dreamrealitytuition.com www.dreamrealitytuition.com



## பகுதி -5

47. அடிமாறாமல் பாடலை எழுதுக:-

அ) "ஏடு தொடக்கி" - எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.

ஆ) வினைவலியும் - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

* * * வாழ்த்துக்கள் * * *

---

DREAM REALITY TUITION & TUTORIAL

DREAM REALITY NEET COACHING CENTRE | PLAY SCHOOL | TUITION & TUTORIAL,
PERUMANALLUR, TIRUPPUR - CONTACT : 9942456409 | 7010632838.